2019 ஜூலை 11]

88—

வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம்

***10833—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரையிலுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் வட்டத்திலே, சோழிங்கநல்லூர் மற்றும் பள்ளிக்கரணை ஆகிய குறுவட்டங்களில், வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் குறுவட்டத்திற்கு உட்பட்டதாகும். ஆகவே, நீலாங்கரை கிராமத்திற்கு தனியாக ஒரு வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வருவாய் கிராமங்கள் 3 வருவாய் அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் 7 ஊராட்சிகளுக்கு ஒரு*

வருவாய் அலுவலகம் என இயங்கி வருகின்றது. இந்த இரண்டு வருவாய் அலுவலகங்களில் சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், துரைப்பாக்கம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற மக்களெல்லாம் பள்ளிக்கரணையில் இருக்கின்ற வருவாய் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிருக்கின்றது. பள்ளிக்கரணையில் இருக்கின்ற ஒருசில ஊர்களிலுள்ள பொது மக்களெல்லாம் சோழிங்கநல்லூருக்கு வரவேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவேதான், OMR பகுதியில் உள்ள கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி ஆகிய பகுதிகளெல்லாம் நீலாங்கரையை மையமாக வைத்து ஒரு வருவாய் அலுவலகத்தை உருவாக்கி, அங்கு புதியதாக ஒரு கட்டடத்தை கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், துரைப்பாக்கம், பெருங்குடி, சீவரம், காரப்பாக்கம் ஆகிய கிராமங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம் பள்ளிக்கரணையில் இருக்கின்ற வருவாய் அலுவலகத்திற்கு 6 கிலோ மீட்டர் தூரம் சென்று அங்கு அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் நமது அமைச்சர் அவர்கள் சரிசெய்து தருமாறு வேண்டுகிறேன். சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ளடங்கிய நீலாங்கரை, பாலவாக்கம், கொட்டிவாக்கம் ஆகிய பகுதிகளில் வாழும் பொது மக்கள் எல்லாம் கிராம நிருவாக அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற பாலவாக்கத்திற்குத்தான் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, நீலாங்கரைக்கும், பாலவாக்கத்திற்கும் தனித்தனியே கிராம நிருவாக அலுவலரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஈஞ்சம்பாக்கத்தில் கிராம நிருவாக அலுவலகம் சொந்த கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்தக் கிராம நிருவாக அலுவலகத்திற்கு புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜல்லடியன்பேட்டையில் இருக்கின்ற கிராம மக்கள் எல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இரண்டு கேள்விகள் இருக்கின்றன. ஒரு கேள்வியைச் சீக்கிரம் முடித்தால்தான் அடுத்த கேள்வியைக் கேட்கலாம். நீங்கள் ஒரு கேள்வியிலேயே 10 கேள்வியை அமைச்சரிடம்

2019 ஜூலை 11]

கேட்டீர்களென்றால், அமைச்சரால் எப்படி பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) எல்லாம் பிரச்சினைதான். கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துடன் முடித்துவிடுகிறேன். ஜல்லடியன்பேட்டையில் இருக்கின்ற கிராம மக்கள் எல்லாம் சோழிங்கநல்லூரில் இருக்கின்ற கிராம நிருவாக அலுவலரைத்தான் பார்க்க வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, 200-வது வார்டு, செம்மஞ்சேரிக்கு கிராம நிருவாக அலுவலர் இல்லை. சோழிங்கநல்லூர் பகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஒன்றியத்தை உள்ளடக்கிய மேடவாக்கம் ஊராட்சி கிராம நிருவாக அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கவில்லை. ஆகவே, இதையெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்கள் சோழிங்கநல்லூருக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசவில்லை. நீங்கள் கேள்வியைத்தான் கேட்க வேண்டும். இது முறையில்லை. உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீலாங்கரை, சோழிங்கநல்லூருக்கும், பள்ளிக்கரணைக்கும் மையமாக இருந்தால் மக்கள் எளிதிலே அணுக முடியுமென்ற அடிப்படையிலே ஒரு குறு வட்டத்தை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குகின்ற அந்தக் குறு வட்டத்திற்கு கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார். அதேபோல, வருவாய்க் கிராமத்தைப் பிரித்து, அதை மக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில், ஆட்சி எல்லைகளை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். அதேபோல, கிராம நிருவாக அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கக் கூடியவற்றுக்கெல்லாம் சொந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார். ஆகவே, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் புதியதாக குறு வட்டம் உருவாக்குவதற்கும்,*

அதற்குத் தேவையான கட்டடங்களை உருவாக்குவதற்கும், அதேபோல, வருவாய்க் கிராமங்களைப் பிரிப்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களே அந்த வருவாய் கிராமங்களை தேவையான அளவிலே, மக்கள் எளிதிலே அணுகக்கூடிய வகையிலே உருவாக்கலாம். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட நிருவாகத்திற்கு உரிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் என்பதையும் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே மக்கள் எளிதாக வருவாய்த் துறையை அணுகுகிற வகையிலேதான், ஆட்சி எல்லைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் ஆட்சியில் புதியதாக சோழிங்கநல்லூருக்கு ஒரு தாலுகா உருவாக்கப்பட்டு, அது இன்றுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு ஒரு புதிய கட்டடத்தை கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில், வருவாய்க் கிராமங்களைத் தேடி வருவாய்த் துறை என்கின்ற அடிப்படையில், மறைந்த முதல்வர் பெயரில் நடத்தி வருகின்ற மக்கள் குறைதீர் முகாமில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் 1-7-2016 முதல் 13-1-2017 வரை இந்த முகாமின் மூலமாக 2,435 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 685 மனுக்கள், ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், இன்று வரை முதியோர்களோ, மாற்றுத் திறனாளிகளோ, கணவனால் கைவிடப்பட்டவர்களோ, கணவனை இழந்தவர்களோ உதவி பெறாமல், மனுக்கள் பெறப்பட்டு உத்தரவு வழங்கியும்கூட, இன்று வரை அரசு உதவித் தொகை வழங்கப்படவில்லை. இன்றைக்கு பெரும்பாக்கத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஏற்கெனவே வழங்கப்பட்ட

2019 ஜூலை 11]

மனுக்கள்மீது உத்தரவு வழங்கியும், மக்களுக்கு, எதிர்பார்த்து எந்தப் பலனும் கிடைக்காத நிலையில், மக்கள் ஏக்கத்தோடு இந்த அரசை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, மறைந்த முதல்வரின் பெயரில் 5-7-2019 அன்று பெரும்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற முகாமில் 19 மனுக்கள் மட்டுமே பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். இப்படி கேட்கக் கூடாது. (குறுக்கீடு) அனுமதியில்லை. எப்படி நான் வேறு உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடு) நீங்கள், இப்படி கேள்வியைக் கேட்டீர்களென்றால், நான் மற்ற உறுப்பினர்களுக்கு எப்படி வாய்ப்புத் தர முடியும்?*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *பெரும்பாக்கம் கிராமத்தில் 5-7-2019 அன்று நடைபெற்ற முகாமில் 19 மனுக்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. இந்த முகாமில் அரசு செலவழிக்கின்ற தொகை ஒரு முகாமிற்கு 5,000 ரூபாய் எனத் தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்தில்கொண்டு, ஏழையெளிய மக்களுக்கு வழங்குகின்ற அந்த உதவித் தொகையை நீங்கள் நிச்சயமாக அவர்களுக்கு வழங்கினால் அவர்களுடைய வாழ்த்துகள் மூலமாக உங்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியம் கிடைக்கும், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், ஆரோக்கியமாக உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோழிங்கநல்லூர் தாலுகாவிற்கு புதிய கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அது செயல்படுத்தப்படும். அம்மாவின் திருப்பெயரில் நடைபெறுகிற அம்மா மக்கள் குறைதீர்க்கும் முகாமைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் 16,688 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. இதற்கு முன்பாகக்கூட மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கான மக்கள் குறைதீர்க்கும் முகாம்கள் இருந்திருக்கின்றன.*

அவற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்துவது, அவர்களைத்தேடி மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் போவது, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் போவது என்ற நிலை இருந்தது. ஆனால், முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சிந்தனையில் உருவான, ஒரு வருவாய்க் கிராமத்தில் ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தைக் கொண்டு சென்ற ஒரு நிருவாகப் புரட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசில்தான் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் மனுக்கள் குறைந்திருக்கின்றன. கொடுத்த மனுக்களுக்கெல்லாம் தீர்வு காண்பதிலே சிரமங்கள் இருப்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். நிச்சயமாக அம்மா திட்ட முகாம்களில் பெறப்படுகிற அனைத்து மனுக்களுக்கும் அன்று மாலையே உடனடியாகத் தீர்வு காணப்படுகின்றன. அவை பிற துறைகளுக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், ஒரு மாத காலத்திற்குள்ளாக அவை பரிந்துரை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வாலாஜா வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. இதற்கு முன்னரே இந்த கோரிக்கையை வைத்திருக்கிறேன். சென்ற வருடமே கோரிக்கை வைத்தேன்; ஒன்றும் நடைபெறவில்லை. சென்ற வருடம் ஜமாபந்தி நிறைவு கூட்டத்தில் நான் கலந்து கொண்டபோது அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். அன்றைக்கே நான் சொன்னேன், இதே கலைஞர் ஆட்சியாக இருந்தால் நான் இப்போதே அறிவிப்பேன் என்று சொன்னேன். அடுத்து பேசிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி அவர்கள், எங்கள் மாண்புமிகு அம்மா ஆட்சியில் இந்த வருடமே நிச்சயமாக அதைக் கொண்டு வருவோம் என்று சொன்னார். ஆனால், ஒரு வருடம் ஆகிறது. இந்த ஜமாபந்தி கூட்டத்திற்கு நான் சென்றேன். அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். இதுவரைக்கும் அந்த கோரிக்கை நிறைவேறவில்லை. தயவு செய்து மாண்புமிகு

2019 ஜூலை 11]

அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அதுமட்டுமல்லாமல், அது வாலாஜா நகரத்தின் நடுவில் இருக்கிறது. நீங்கள் பார்த்தீர்களென்றால் அங்கே parking *வசதிகூட இல்லை. அந்தக் கட்டடம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. தயவு செய்து, அதை வெளியில் எடுத்துவிட்டு, நல்ல கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருவாய்த் துறையினுடைய சிறந்த செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து, தாலுகா அலுவலகங்களிலிருந்து, கிராம நிருவாக அலுவலகங்கள் வரை எல்லா அலுவலகங்களையும் நாம் கட்டித் தருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டே கோரிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு தேவையான இடங்களில் எல்லாம் உடனுக்குடன் கட்டடங்கள் கட்டி வருகிறது. 2011-2015 காலத்தில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவகங்களுக்கு கட்டடங்களும், 22 கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 159 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 54 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புடன்கூடிய அலுவலகங்களும், 234 கிராம நிருவாக அலுவலகங்களும், 16 இதர கட்டடங்களும் என மொத்தம் இதுவரையில் 493 வருவாய்த் துறை தொடர்புடைய கட்டடங்கள் 612.34 கோடி ரூபாய் அளவில் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவர் காலத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். அந்தப் புள்ளிவிவரங்களும் இருக்கின்றன. 2006-2011 காலத்தில் 123.64 கோடி மதிப்பில் 129 புதிய கட்டடங்கள் மட்டும்தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, தேவையான இடங்களிலெல்லாம் மாண்புமிகு அம்மாவின் அரசு கட்டடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்

***6499—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட 21 பயிற்சி நிலையங்கள்மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,115 நபர்களுக்கு பல்வேறு தொழில் பிரிவுகளில் மாநில அரசின் நிதியின்கீழ் இலவச குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டு, 4,467 நபர்கள் பணி வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். மேலும், மத்திய அரசின் திட்டமான Pradhan Mantri Kaushal Vikas Yojana 2.0 திட்டத்தின்கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 5 பயிற்சி நிறுவனங்களின்மூலம் 684 நபர்களுக்கு பல்வேறு தொழில் பிரிவுகளில் மத்திய அரசின் நிதியின்கீழ் இலவச குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டு, 234 நபர்கள் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மதுரையிலுள்ள CIPET மூலமாக Plastic Engineering துறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிமூலம் 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போதைய தொகுப்பில் 120 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மதுரை மாவட்டத்திற்கென தனியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுப் பயிற்சி முனையம் அமைக்கும் நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.